## 14. ஒழுக்கம் உடைமை

**131.** *ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்*

**ஒருவருக்கு மேன்மைதரக் கூடியது**
**ஒழுக்கம் ! அதை உடையவருக்கு எப்போதும்**
**உயர்வைத் தருவதால் அதனை**
**உயிரை விட மேலானதாகக் காக்க வேண்டும் !**

**132.** *பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்*
*தேரினும் அஃதே துணை*

**பல வழிகளில் ஆராய்ந்து பார்த்து**
**பரிசோதனைகள் முடிவில் வாழ்க்கைக்கு ஒழுக்கம்**
**பக்க துணை எனப் புரிந்தால் அதன் –**
**பக்க விளைவுகள் பற்றிக் கவலைப்படாமல் காக்க வேண்டும் !**

**133.** *ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்*

**ஒழுக்கத்தை விடாமல் என்றென்றும்**
**ஒருமனதோடு கடைப்பிடிப்பவர்கள் உயர்குடி என**
**ஒப்புதல் கூறப்படும் ! ஆனால்**
**ஒழுக்கம் தவறுகிறவர்கள் இழிந்த குடியே !**

**134.** *மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்*

**ஓங்கிய உயர்குலத்தில் பிறந்தோர்**
**ஓதுவதையும் – கற்பதையும் மறந்தாலும்**
**ஒன்றுமில்லை ! ஆனால் வாழ்வில்**
**ஒழுக்கம் இல்லையேல் இழி குலமே !**

**135.** *அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை*
*ஒழுக்க மிலான்கண் உயர்வு*

**அழுக்கும் பொறாமையும் மனதில் கொண்டவனுக்கு**
**அமையும் வாழ்வில் வளர்ச்சி இல்லை !**
**ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வும் இல்லை**
**ஒப்பில்லா மேன்மையும் இல்லை !**

*136.* *ஒழுக்கத்தி னொல்கார் உரவோர் இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக் கறிந்து*

**ஒழுக்கம் தவறுதலால் குற்றம் மிகுந்து**
**ஒடுங்கி நடந்து இழிவைக் காண மனம்**
**ஒத்துக் கொள்ளாததால் மன உறுதி மிக்கவர்கள்**
**ஒழுக்கத்திலிருந்து பிறழவே மாட்டார்கள் !**

*137.* *ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவ ரெய்தாப் பழி*

**விடா ஒழுக்கத்தால் உயர்வு வரும் ! – அதை**
**விட்டு விட்டால் அடையத் தகாத**
**விடயமாக இழிவான பழி வந்து சேரும் !**

*138.* *நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்*

**நல்லொழுக்கும் இனிய வாழ்க்கையின்**
**நன்மைக்கு வித்திடுவதாகும் !**
**தீயொழுக்கம் என்றும் வாழ்க்கையில்**
**தீராதத் துன்பம் தரும் !**

*139.* *ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்*

**தவ ஒழுக்கம் உடையவர் வாயிலிருந்து**
**ஒருப்போதும் தவறியும்**
**ஒப்பில்லா வார்த்தைகள்**
**ஒலிக்காது !**

*140.* *உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்*
*கல்லா ரறிவிலா தார்*

**அரிய பல நூல்களைக் கற்றுத் திறம்பட**
**அறிந்திருந்தாலும் ஒழுக்கமெனும் பண்பால்**
**அகண்ட உலகத்தோடு நட்பு ஒழுகத் தெரியாதவர்கள்**
**அறிவில்லாதவர்களே ஆவார்கள் !**